# திருக்குறள் தெளிவுரை—1.

1948—49-க்கு

உயர்நிலைப்பள்ளி முதல் பாரத்திற்குரிய

## ஐம்பது திருக்குறளும்,

558

மயிலம் தமிழ்க் கல்லூரியில் விரிவுரையாளரா யிருந்த

**வித்துவான். சுந்தர. சண்முகனார்**

எழுதிய

## தெளிவுரையும்.

**பைந்தமிழ்ப் பதிப்பகம்**

61–பி, வைசியர் தெரு,

புதுச்சேரி.

| | | | |
|---|---|---|---|
| முதல் பதிப்பு | .. | .. | 30—7—1948. |
| இரண்டாம் பதிப்பு | .. | .. | 30—8—1948. |
| மூன்றாம் பதிப்பு | .. | .. | 29—9—1948. |
| நான்காம் பதிப்பு | .. | .. | 30—10—1948. |

ஸ்ரீ அரவிந்த ஆஸ்ரம அச்சகம்
புதுச்சேரி

W. D. 599/48/1000

# பதிப்புரையும், முன்னுரையும். 558

**திருக்குறள் தெளிவுரை—1.** என்னும் இப்புத்தகமாகிய எங்கள் நான்காவது வெளியீட்டை மூன்ருவது பதிப்பாகப் பதிப்பிக்கின்ரேம்.

1948-49-ஆம் ஆண்டுக்கு, உயர்நிலைப் பள்ளி முதல் பாரத்திற்கு உரியனவாகச் சென்னை மாகாண அரசியலாரால் புதிதாகத் திருத்தி யமைக்கப்பட்ட ஐம்பது திருக்குறள்கட்கும், மாணவருக்கு ஏற்பத் தெளிவான உரை இந்நூலில் எழுதப் பெற்றுள்ளது. கடைசியில் மாதிரிக் கேள்விகளும் தரப் பெற்றுள்ளன. மாணவருக்குப் புரிய வேண்டும் என்னும் நோக்கத்தால், பிறமொழிச் சொற்களும் கலக்கப்பட்டுள்ளன.

இப்புத்தகத்திற்குப் போதிய ஆதரவு தந்து, எங்கள் முயற்சிக்கு ஊக்கம் அளிக்கும்படி, அரசியலாரையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் கேட்டுக் கொள்ளுகிரேம்.

பைந்தமிழ்ப் பதிப்பகம்,
புதுச்சேரி
29—9—1948

இங்ஙனம்,
**சிங்கார. குமரேசன்.**
**சுந்தர. சண்முகன்.**

நான்காவது வெளியீடு.

எல்லா உரிமையும் பைந்தமிழ்ப் பதிப்பகத்திற்கே.

விலை அணா 4.

## தோற்றுவாய் :

**திரு**வள்ளுவரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட் டிருக்கலாம். அவர் உயர்ந்த தமிழ்ப் புலவர். நற்குண நற்செய்கை உடையவர். சுமார் 1700 ஆண்டுகட்குமுன், சிறப்புடன் தமிழ் நாட்டில் வாழ்ந்தவர். அவர் எழுதிய புத்தகமே **திருக்குறள்.**

பொதுவாக இரண்டடிப் பாட்டைக் குறள் என்பார்கள். திருக்குறளிலுள்ள அழகிய 1330 பாட்டுக்களும் இரண்டடி உடையன. ஆதலால், அதற்குத் திருக்குறள் என்று பெயர் வைக்கப்பட்டது. இன்னும், உலகத்தார்க் கெல்லாம் பொதுவான கருத்துக்களைச் சொல்லுவதால் **பொதுவேதம்** என்றும் இதற்கு ஒரு பெயர் உண்டு. இதனை எல்லாச் சாதி சமயத்தினரும் போற்றுகின்றனர்.

திருக்குறளில், அறத்துப் பால், பொருட்பால், காமத்துப் பால் என மூன்று பகுதிகள் உண்டு. ஒவ்வொரு பகுதியிலும் பல அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துப் பத்துக் குறள்கள் உள்ளன.

இத்தகைய திருக்குறளி லிருந்து, நீங்கள் படிப்பதற்காக ஐம்பது குறள்கள் தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளன. அவற்றைத் தெளிவுரையுடன் இப்புத்தகத்தில் படிக்கலாம். இவ்வுரையில், அதிகாரப் பெயரும், அதன் விளக்கமும், குறள் மூலமும், பதவுரையும், கருத்துரையும், எழுவாய் பயனிலைகளும் முறையே எழுதப்பட் டுள்ளன. இரண்டு வாக்கியம் உள்ள குறள்கட்கு இரண்டு எழுவாய் பயனிலைகள் எழுதப்பட்டிருக்கும். கடைசியில் மாதிரிக் கேள்விகளும் கொடுக்கப்பட்டுள்ளதைப் பார்க்கலாம்.

# திருக்குறள் தெளிவுரை

## 1. கடவுள் வாழ்த்து

*எல்லாம் வல்ல கடவுளை வாழ்த்துதல்.*

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.**

*(பத உரை) எழுத்தெல்லாம்—எல்லா எழுத்துக்களும், அகரம்—அ என்னும் எழுத்தை, முதல—தங்கட்கு முதன்மை யாக உடையன. (அதுபோல) உலகு—உலகமானது, ஆதி-எல்லா வற்றிற்கும் மூலமாகிய, பகவன்—கடவுளை, முதற்று—முதன்மை யாக உடையது. ஏ—அர்த்த மில்லாத அசை.*

*(கருத்துஉரை) உலகத்தின் முதல் தலைவர் கடவுள். உலகம்—எழுவாய் ; முதற்று—பயனிலை.*

## 2. அறன் வலியுறுத்தல்

*தருமத்தின் கட்டாயத்தை வற்புறுத்திக் கூறுதல்*

**அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை**
**மறத்தலி னூங்கில்லை கேடு.**

*(ப-உ) அறத்தினூஉங்கு—தருமத்தைக் காட்டிலும், ஆக்க மும் இல்லை—நன்மை தருவது வேறொன்றும் இல்லை. அதனை—அத்தருமத்தை, மறத்தலினூங்கு—செய்யாது மறந்துவிடுவதைக் காட்டிலும், கேடு இல்லை—வேறு கெடுதி தருவது ஒன்றில்லை.*

*(க-உ) தருமத்தாலேயே பெரிய நன்மை உண்டாகும்.*

*ஆக்கம்—எழுவாய் ; இல்லை—பயனிலை. கேடு—எழுவாய் ; இல்லை—பயனிலை.*

## 3. மக்கள் பேறு

*நல்ல பிள்ளைகளைப் பெறுவதால் உண்டாகும் நன்மை.*

**மகன்தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை**
**என்நோற்ருன் கொல்லெனும் சொல்.**

(ப-உ) மகன்—ஒரு பிள்ளை, தந்தைக்கு—தன்னைப் பெற்று அறிவாளி யாக்கிய தகப்பனுக்கு, ஆற்றும்—செய்ய வேண்டிய, உதவி—பதில் உபகாரம் என்னவென்ருல்,(பிறர் அப்பிள்ளையைப் பார்த்து) இவன் தந்தை—இப்பிள்ளையின் தகப்பன், என் நோற்ருன் கொல்—என்ன தவம் செய்தானே, எனும் சொல்-என்று பாராட்டும் புகழ்ச்சிச் சொல்லாகும்.

(க-உ) தன் தந்தையைப் பிறர் புகழும்படியாகப் பிள்ளை நடந்துகொள்ள வேண்டும்.

உதவி—எழுவாய் ; சொல்—பயனிலே.

## 4. அன்புடைமை

*எல்லோரிடத்திலும் அன்பு வைத்தல்.*

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு.**

(ப-உ) அன்புஇலார்—பிறரிடத்து அன்பு இல்லாதவர்கள், எல்லாம்—எல்லாப் பொருள்களையும், தமக்கு உரியர்—தங்களுக்கே உரியனவாக வைத்துக்கொள்வார்கள். அன்பு உடையார்-பிறரிடத்து அன்பு உடையவர்களோ, என்பும்—தம் எலும்பையுங் கூட, பிறர்க்கு உரியர்—பிறர்க்கு உரியதாகிப் பயன் தரும்படிச் செய்வார்கள்.

(க-உ) அன்புடையார் தன்னலமே கருதாது, எல்லாவற்றையும் பிறர்க்கு உதவுவார்கள்.

அன்பிலார்—எழுவாய் ; தமக்குரியர்—பயனிலே; அன்புடையார்—எழுவாய் ; பிறர்க்குரியர்—பயனிலே.

## 5. விருந்தோம்பல்

*தம்மிடம் வரும் விருந்தினரை உபசரித்தல்*

**இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.**

(ப-உ) இல் இருந்து—(மனைவி மக்களுடன்) வீட்டில் இருந்து, ஓம்பி—பல பொருள்களையும் தேடிக் காப்பாற்றி, வாழ்வதுஎல்லாம்—வாழ்ந்து வருவ தெல்லாம் எதற்காக என்றால், விருந்து ஓம்பி—தங்கள் வீட்டிற்கு வரும் விருந்தினரை உபசரித்து, வேளாண்மை—உதவிகளைச், செய்தல் பொருட்டு—செய்யும் பொருட்டேயாம்.

(க-உ) குடும்பத்தில் இருப்பவர், விருந்தினரை உபசரிக்க வேண்டியது கடமை.

வாழ்வதெல்லாம்—எழுவாய் ; செய்தற் பொருட்டாம்—பயனிலை. ஆம்—தொக்கி நிற்கின்றது.

## 6. (இதுவும் விருந்தோம்பலே)

**விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.**

(ப-உ) சாவா—சாவையே உண்டாக்காத, மருந்து எனினும்—தேவாமிர்தமாக இருந்தாலுங்கூட, விருந்து—தம்மை நாடிவந்த விருந்தினர், புறத்ததா—வெளியே இருக்க (அவரை விட்டுவிட்டு) தான் உண்டல்—தான் மட்டும் சாப்பிடுதல், வேண்டற் பாற்று அன்று—விரும்பத்தக்க தன்று.

(க-உ) உயர்ந்த உணவானாலும், விருந்தினரை விட்டு உண்ணுதல் வெறுக்கத் தக்கதாகும்.

தான்உண்டல்—எழுவாய் ; வேண்டற் பாற்றன்று—பயனிலை.

## 7. இனியவை கூறல்

*இனிமையான சொற்களைப் பேசுதல்.*

**முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்**
**இன்சொ லினதே அறம்.**

(ப-உ) அறம்–தருமம் எனப்படுவது, முகத்தான்–(தம்மிடம் வருபவரைக் கண்டதும்) முகமலர்ச்சியுடன், அமர்ந்து—விரும்பி, இனிது நோக்கி—இனிமையாகப் பார்த்து, (பின் அவர் நெருங்கி வந்ததும்) அகத்தான் ஆம்—மன மலர்ச்சியுடன் உண்டாகும், இன் சொலினதே—இன் சொல்லினிடத்தேயே உள்ளதாம்.

(க-உ) தம்மை நாடி வந்தவரிடம் முகமலர்ந்து இன்சொல் சொல்லுவதே சிறந்த அறம்.

அறம்—எழுவாய் ; இன்சொலினதே—பயனிலே.

## 8. செய்ந்நன்றி அறிதல்

*தமக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை.*

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல(து)**
**அன்றே மறப்பது நன்று.**

(ப-உ) நன்றி—தமக்குப் பிறர் செய்த நன்மையை, மறப்பது—மறந்து விடுவது, நன்றன்று—நல்லதன்று. நன்று அல்லது —தமக்குப் பிறர் செய்த நன்மை யல்லாத தீமையை, அன்றே–செய்த அப்பொழுதே, மறப்பது—மறந்துவிடுவது, நன்று—நல்லது.

(க-உ) பிறர் செய்த நன்மையை மறக்காமல், தீமையை மட்டும் மறந்துவிட வேண்டும்.

நன்றிமறப்பது—எழுவாய்; நன்றன்று—பயனிலே. அன்றே மறப்பது—எழுவாய் ; நன்று—பயனிலே.

## 9. நடுவு நிலைமை

*எல்லோர்க்கும் பொதுவாக நடக்கும் தன்மை.*

**சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க்(கு) அணி.**

(ப-உ) சான்றோர்க்கு—பெரியோர்க்கு, அணி—அழகாவது, சமன் செய்து—முதலில் தன்னைச் சமமாக வைத்துக் கொண்டு, சீர்தூக்கும்—பின்பு தன்னிடத்தில் வைக்கும் சுமைகளின் ஏற்றத் தாழ்வுகளைத் தெரிவிக்கும், கோல்போல்—(தராசு) துலாக் கோலைப்போல, அமைந்து—முதலில் பெரியவர்களாகிய தாங்கள் உண்மையுடையவராய் இருந்து, ஒருபால் கோடாமை—ஒருவர்க்கு ஒருவிதமாகவும் மற்றொருவர்க்கு மற்றொரு விதமாகவும் நடவாமல் நடுவாக நிற்றலாம்.

(க-உ) பொதுவாக நடப்பதே பெரியோர்க்கு அழகு.

*அணி—எழுவாய் ; கோடாமை—பயனிலை.*

## 10. அடக்கம் உடைமை

*அடக்கம் உடையவராய் இருத்தல்.*

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆர்இருள் உய்த்து விடும்.**

(ப-உ) அடக்கம்—அடக்கமான குணம், அமரருள் உய்க்கும்-(தன்னை உடையவனைத்) தேவ உலகத்தில் கொண்டுபோய்விடும். அடங்காமை—அடங்காத தன்மை, ஆர் இருள்—நிறைந்த நரகமாகிய இருட்டில், உய்த்துவிடும்—கொண்டுபோய் விட்டுவிடும்.

(க-உ) அடக்கம் உடையவருக்குச் சுவர்க்கமும், அடக்கம் இல்லாதவருக்கு நரகமும் கிடைக்கும்.

*அடக்கம்—எழுவாய் ; உய்க்கும்—பயனிலை. அடங்காமை—எழுவாய் ; உய்த்துவிடும்—பயனிலை.*

## 11. ஒழுக்கம் உடைமை

*நல்லொழுக்கம் உடையவராய் இருத்தல்*

**ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**

(ப-உ) ஒழுக்கம்—நல்நடத்தை, விழுப்பம் தரலால்—உயர்வைக் கொடுப்பதால், ஒழுக்கம்—அந்நல் நடத்தை, உயிரினும்—உயிரைக் காட்டிலும், ஓம்பப்படும்— பாதுகாக்கப்பட வேண்டியதாகும்.

(க-உ) ஒழுக்கம் உயிரிலும் உயர்ந்தது.

ஒழுக்கம்—எழுவாய் ; ஓம்பப்படும்—பயனிலை.

## 12. பொறை உடைமை

பொறுமை உடையவராய் இருத்தல்.

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

(ப-உ) அகழ்வாரை—தன்னைத் தோண்டுகின்றவர்களை, தாங்கும்—கீழே விழாமல் தாங்குகின்ற, நிலம்போல—பூமியைப் போல, தம்மை—தங்களை, இகழ்வார்—இகழ்பவர்களைப், பொறுத்தல்—பொறுத்துக்கொள்ளுதல், தலை-முதன்மையான அறமாகும்.

(க-உ) தம்மை இகழ்பவரைப் பொறுத்தல் நல்லது.

பொறுத்தல்—எழுவாய் ; தலை—பயனிலை.

## 13. அழுக்காறுமை

பிறரை நோக்கிப் பொறாமை கொள்ளாமை.

**ஒழுக்காறுக் கொள்க ஒருவன் தன்னெஞ்சத்(து)**
**அழுக்கா(று) இலாத இயல்பு.**

(ப-உ) ஒருவன்—ஒரு மனிதன், தன் நெஞ்சத்து—தன் மனத்திலே, அழுக்காறு இலாத—பொறாமை இல்லாத, இயல்பு-நல்ல தன்மையினை, ஒழுக்க ஆறாக—நல்லொழுக்க வழியாகக், கொள்க—கொள்வானாக.

(க-உ) மனதாலும் பொறாமைப்படலாகாது.
ஒருவன்—எழுவாய் ; கொள்க—பயனிலை.

## 14. புறங் கூறாமை

இல்லாத விடத்துப் பிறரை இகழ்ந்து பேசாமை.

**ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்**
**தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.**

(ப-உ) (புறங் கூறுபவர்கள்) ஏதிலார்—பிறருடைய, குற்றம் போல்—குற்றத்தைக் கவனித்தல் போல், தம் குற்றம்—தங்கள் குற்றத்தையும், காண்கிற்பின்—கவனிப்பார்களாயின், மன்னும் உயிர்க்கு—நிலைத்த உயிருக்கு, தீது உண்டோ—வரக்கூடிய துன்பம் ஒன்று உண்டோ ? இல்லை.

(க-உ) பிறர் குற்றம்போல் தம் குற்றத்தையும் கவனித்தால் ஒரு தீமையும் வராது.

தீது—எழுவாய் ; உண்டோ—பயனிலை.

## 15. தீவினை அச்சம்

*கெட்ட காரியங்களைச் செய்யப் பயப்படுதல்*

**தீயவை தீய பயத்தலால் தீயவை**
**தீயினும் அஞ்சப் படும்.**

(ப-உ) *தீயவை—(தம் நன்மை கருதிச் செய்யப்படும்) கெட்ட காரியங்கள், தீய பயத்தலால்—பின்னால் கெடுதியையே உண்டாக்குவதால், தீயவை—அக்கெட்ட காரியங்கள், தீயினும்—நெருப்பைக் காட்டிலும், அஞ்சப்படும்—பயப்படத் தக்கனவாம்.*

(க-உ) *தீமை தரும் காரியங்களைச் செய்யப் பயப்பட வேண்டும்.*

*தீயவை—எழுவாய் ; அஞ்சப்படும்—பயனிலை.*

## 16. ஒப்புரவு அறிதல்

*உலகநிலை உணர்ந்து உதவி செய்தலை அறிதல்.*

**ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
**பேர்அறி வாளன் திரு.**

(ப-உ) *உலகு—உலக நிலையை, அவாம்—உணர்ந்து உதவி செய்ய விரும்பும், பேர் அறிவாளன்—பெரிய அறிவாளியினுடைய, திரு—செல்வமானது, ஊருணி—ஊரார் மொண்டு தண்ணீர் உண்ணும் குளம், நீர்—தண்ணீரால், நிறைந்தஅற்று—நிறையப் பெற்ற அத்தன்மை போலாகும். ஏ அசைச் சொல்.*

(க-உ) *உலகத்தார்க்கு உதவுபவன் செல்வம் ஊருணிபோல் நிறைந்து பயன்படும்.*

*திரு—எழுவாய் ; அற்று—பயனிலை.*

## 17. ஈகை

ஏழைகளுக்கு இல்லை என்னாது கொடுத்தல்

**நல்லா றெனினும் கொளல்தீது மேல்உலகம்**
**இல்லெனினும் ஈதலே நன்று.**

(ப-உ) கொளல்—பிறரிடமிருந்து ஒன்றை ஏற்றல், நல் ஆறு எனினும்—மோட்சத்திற்கு உரிய நல்ல வழி என்றாலும் கூட, தீது—அது கெட்டதே. (ஏழைக்கு உதவுவதால்) மேல் உலகம்—மோட்சம், இல் எனினும்—இல்லை யென்றாலும் கூட, ஈதலே—கொடுத்தலே, நன்று—நல்லது.

(க-உ) ஏற்றல் தாழ்வு ; ஈதல் உயர்வு.

கொளல்—எழுவாய் ; தீது—பயனிலை. ஈதல்—எழுவாய் ; நன்று—பயனிலை.

## 18. புகழ்

பிறர் கூறும் புகழ்ச்சி.

**தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.**

(ப-உ) தோன்றின்—உலகில் ஒருவர் மனிதராய்ப் பிறந்தால், புகழொடு தோன்றுக—புகழோடு தோன்றி விளங்குவாராக. அஃது இலார்—அப்புகழ்ச்சி இல்லாதவர்கள், தோன்றலின்—பிறப்பதைக் காட்டிலும், தோன்றாமை—பிறவா திருத்தல், நன்று—நல்லது.

(க-உ) உலகில் தோன்றினால், புகழோடு விளங்க வேண்டும்.

ஒருவர்—தோன்றா எழுவாய் ; தோன்றுக—பயனிலை.

தோன்றாமை—எழுவாய் ; நன்று—பயனிலை.

## 19. வாய்மை

மெய் உடையவராய் இருத்தல்.

**புறத்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை**
**வாய்மையால் காணப் படும்**

(ப-உ) புறம்தூய்மை—(மனிதர்க்கு) வெளி உடம்பு சுத்தமா யிருத்தல், நீரான் அமையும்—தண்ணீரால் உண்டாகும்(ஆனல்) அகம்தூய்மை—மனம் சுத்தமா யிருத்தல், வாய்மையால்–மெய் உடைமையால், காணப்படும்—உண்டாகும்.

(க-உ) மெய்யுடைமையால் மனம் சுத்தமாகும்.

புறந்தூய்மை—எழுவாய் ; அமையும்—பயனிலே. அகந் தூய்மை—எழுவாய் ; காணப்படும்—பயனிலே.

## 20. வெகுளாமை

கோபம் கொள்ளா திருத்தல்.

**தன்னேத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்**
**தன்னேயே கொல்லும் சினம்.**

(ப-உ) தன்னேத்தான்—ஒருவன் தன்னேத் தானே, காக் கின்—காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானல், சினம் காக்க—தனக்குக் கோபம் வராமல் காத்துக் கொள்வானுக. காவாக்கால் –அப்படிக் காவாவிட்டால், சினம்—அக்கோபமானது, தன்னேயே—அவனேயே, கொல்லும்—அழித்துவிடும்.

(க-உ) கோபம் உடையவர்களே, அவர் கோபமே அழித்து விடும்.

சினம்—எழுவாய் ; கொல்லும்—பயனிலே.

## 21. இன்னா செய்யாமை

*பிற உயிர்க்குத் துன்பம் செய்யாமை.*

**சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.**

(ப-உ) மாசு அற்றார்—குற்றம் அற்ற பெரியவர்களின், கோள்—கொள்கையாவது, (பிறர்க்குத் துன்பம் செய்வதால்) சிறப்பு ஈனும்—பெரிய உயர்வைக் கொடுக்கக்கூடிய, செல்வம் பெறினும்—செல்வங்களைப் பெறலாம் ஆனாலும், பிறர்க்கு—பிற ருக்கு, இன்னா செய்யாமை—துன்பம் செய்யா திருத்தலே.

(க-உ) தம் நன்மை கருதிப் பிற உயிர்க்குத் துன்பம் செய்ய லாகாது.

கோள்—எழுவாய் ; இன்னா செய்யாமை—பயனிலை.

## 22. இறை மாட்சி

*அரசனது பெருந் தகுதி.*

**தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன் ஆள்பவற்கு.**

(ப-உ) நிலன் ஆள்பவற்கு—பூமியை ஆளும் அரசனுக்கு, தூங்காமை—சோர்வுஇல்லாமை, கல்வி—படிப்பு,துணிவுஉடைமை —துணிச்சல் உடைமை, இம்மூன்றும்—என்னும் இம்மூன்று தகுதிகளும், நீங்கா—நீங்காமல் இருக்க வேண்டியவை.

(க-உ) தூங்காமை, கல்வி,துணிவுடைமை என்னும் மூன்றும் அரசனுக்கு இருக்கவேண்டியவைகள்.

மூன்றும்—எழுவாய் ; நீங்கா—பயனிலை.

## 23. கல்வி

*நல்ல புத்தகங்களைப் படித்தல்*

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

(ப-உ) (ஒருவன்) கற்பவை—படிக்கத் தகுந்த புத்தகங்களை, கசடு அற—பிழை யில்லாமல், கற்க—படிப்பானாக. கற்றபின்—படித்தபின், அதற்குத்தக—அப்புத்தகங்களில் சொல்லியுள்ள படி, நிற்க—நடப்பானாக.

(க-உ) நல்ல புத்தகங்களைப் படித்து அதன்படி நடக்க வேண்டும்.

ஒருவன்—தோன்றா எழுவாய் ; கற்க, நிற்க—பயனிலைகள்.

## 24. (இதுவும் கல்வியே)

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு.**

(ப-உ) எண் என்ப—உலகத்தார் கணக்குப் புத்தகம் என்று சொல்லுவனவும், ஏனை—மற்றைய, எழுத்து என்ப— எழுத்தாலான புத்தகம் என்று சொல்லுவனவும் ஆகிய, இவ்விரண்டும்—இவ்விருவகைப் புத்தகங்களையும், வாழும் உயிர்க்கு—உலகில் வாழும் உயிர்களுக்கு, கண் என்ப—இரண்டு கண்கள் என்று அறிவுடையோர் சொல்லுவர்.

(க-உ) எண்ணும் எழுத்தும் இரு கண்களாகும்.

அறிவுடையோர்—தோன்றா எழுவாய் ; கண் என்ப—பயனிலை.

## 25. கல்லாமை

*படிக்கத்தக்க புத்தகங்களைப் படிக்காத தாழ்மை*

**மேல்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
**கற்றார் அனைத்(து) இலர் பாடு.**

(ப-உ) கல்லாதார்—படிக்காதவர், மேல்—உயர்ந்த சாதியில், பிறந்தார் ஆயினும்—பிறந்தார் ஆனாலுங்கூட, கீழ்ப்பிறந்தும்—தாழ்ந்த சாதியில் பிறந்தும், கற்றார்—படித்தவருக்குள்ள, அனைத்து—அந்த அளவு, பாடு—பெருமை, இலர்—இல்லாதவராவர்.

(க-உ) கற்றவரே உயர் குலத்தவர்; கல்லாதவரே இழி குலத்தவர்.

கல்லாதார்—எழுவாய்; பாடு இலர்—பயனிலை.

## 26. கேள்வி

*கேட்கத்தக்க கருத்துக்களைக் கேட்டல்.*

**செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை.**

(ப-உ) செல்வத்துள்—மனிதர்க்கு இருக்க வேண்டிய செல்வங்களுள், செவிச் செல்வம்—காதால் கேட்கும் கேள்விச் செல்வமும், செல்வம்—ஒரு செல்வமாகும். அச்செல்வம்—(மேலும்) அக்கேள்விச் செல்வமானது, செல்வத்துள் எல்லாம்—மற்றைய செல்வங்கள் எல்லாவற்றைக் காட்டிலும், தலை—முதன்மையானதாகும்.

(க-உ) கேள்விச் செல்வமே தலை சிறந்த செல்வம்.

அச் செல்வம்—எழுவாய்; தலை—பயனிலை.

## 27. அறிவுடைமை

நல்ல அறிவு உடையவராய் இருத்தல்.

**அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்.**

(ப-உ) அறிவு உடையார்—(தம்மிடம் வேறென்றும் இல்லா விட்டாலும்) நல்ல அறிவு மட்டும் உடையவர்கள், எல்லாம் உடையார்—வேறு எல்லாப் பொருள்களேயும் உடையவராகக் கருதப்படுவார்கள். அறிவு இலார்—நல்ல அறிவு இல்லாதவர்கள், என் உடையரேனும்—வேறு எல்லாப் பொருள்களேயும் உடையவராக இருந்தாலும், இலர்—ஒன்றும் இல்லாதவராகவே கருதப்படுவார்கள்.

(க-உ) நல்லறிவால் எல்லாச் செல்வங்களேயும் சம்பாதித்துக் கொள்ளலாம்.

அறிவுடையார்—எழுவாய் ; உடையார்—பயனிலே. அறிவிலார்—எழுவாய் ; இலர்—பயனிலே.

## 28. குற்றங் கடிதல்

குற்றங்களேப் போக்குதல்.

**வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**
**வைத்தூறு போலக் கெடும்.**

(ப-உ) வருமுன்னர்—குற்றம் வருவதற்கு முன்பேயே, காவாதான்—வாராதபடிக் காத்துக் கொள்ளாதவனுடைய, வாழ்க்கை—வாழ்க்கையானது, (அக்குற்றம் வந்தபோது) எரி முன்னர்—நெருப்பின் முன்னே உள்ள, வைதூறு போல—வைக்கோல் போரைப் போல, கெடும்—கெட்டுவிடும்.

(க-உ) வருவதற்கு முன்பேயே குற்றத்தைத் தடுத்துக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கை—எழுவாய் ; கெடும்—பயனிலே.

## 29. பெரியாரைத் துணைக் கோடல்

சிறந்த பெரியோரைத் துணையாகக் கொள்ளுதல்.

**உற்றநோய் நீக்கி உறுஅமை முன்காக்கும்**
**பெற்றியார்ப் பேணிக் கொளல்.**

(ப-உ) உற்ற நோய்—(ஒருவன்) தனக்கு வந்த துன்பத்தை, நீக்கி—போக்கி, உறுஅமை—அது போன்ற துன்பம் மீண்டும் வராதபடி, முன்காக்கும்—முன் சாக்கிரதையாக அறிந்து காப்பாற்றக்கூடிய, பெற்றியார்—தன்மையுடைய பெரியோர்களை, கோடல்—தனக்குத் துணையாகக் கொள்வானுக.

(க-உ) துன்பங்களிலிருந்து காப்பாற்றும் பெரியோரைத் துணையாகக் கொள்ள வேண்டும்.

ஒருவன்—தோன்ரு எழுவாய் ; கொளல்—பயனிலே.

## 30. சிற்றினம் சேராமை

இழிந்த குணமுடையவர் கூட்டத்தில் கூடாதிருத்தல்.

**நிலத்தியல்பால் நீர்திரிந் தற்ருகும் மாந்தர்க்(கு)**
**இனத்தியல்ப தாகும் அறிவு.**

(ப-உ) நீர்—தண்ணீரானது, நிலத்து இயல்பால்—தான் சேர்ந்துள்ள பூமியின் தன்மையால், திரிந்து—தன் இயற்கைத் தன்மை மாறுபட்டு, அற்று ஆகும்—அந்தப் பூமியின் தன்மையாகவே இருக்கும். (அதுபோல), மாந்தர்க்கு—மனிதர்களுக்கு, அறிவு—அறிவானது, இனத்து—தாம் கூடிப் பழகும் கூட்டத்தினுடைய, இயல்பது ஆகும்—தன்மையை உடையதாகவே இருக்கும்.

(க-உ) ஒருவரின் அறிவு, சேர்க்கையின்படியே இருக்கும்.

அறிவு—எழுவாய் ; இயல்பதாகும்—பயனிலே.

## 31. வலி அறிதல்

*தம் வலிமையினையும் பிறர் வலிமையினையும் அறிதல்.*

**நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்**
**உயிர்க்கிறுதி ஆகி விடும்.**

(ப-உ) கொம்பர் நுனி—ஒரு கிளையின் நுனியிலே, ஏறினார்—ஏறிச் சென்றவர்கள், அஃது இறந்து— அந்நுனிக் கிளையினையும் தாண்டி, ஊக்கின்—அப்பால் செல்ல முயல்வாராயின், உயிர்க்கு —அவர் உயிருக்கே, இறுதி—சாவு, ஆகிவிடும்—உண்டாகிவிடும்.

(க-உ) அளவுக்கு மீறாமல், தம் வலிமை யறிந்து எதையும் செய்ய வேண்டும்.

இறுதி—எழுவாய் ; ஆகி விடும்—பயனிலை.

## 32. காலம் அறிதல்

*காரியம் செய்வதற்கு ஏற்ற நேரத்தை அறிதல்.*

**பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்**
**வேந்தர்க்கு வேண்டும் பொழுது.**

(ப-உ) காக்கை—காக்கையானது, கூகையை—தன்னைக் காட்டிலும் வலிமையுடைய கோட்டானை, பகல் வெல்லும்—பகல் காலத்தில் வென்று விடும். (அது போலவே) இகல் வெல்லும்—பகைவரது மாறுபாட்டை வெல்லக் கருதுகின்ற, வேந்தர்க்கு—அரசர்க்கு, பொழுது வேண்டும்—அதற்கேற்ற காலம் வேண்டும்.

(க-உ) எவரும் தமக்கேற்ற காலம் அறிந்து செய்யின் காரியம் கை கூடும்.

பொழுது—எழுவாய் ; வேண்டும்—பயனிலை.

## 33. இடன் அறிதல்

*காரியம் செய்வதற்கு ஏற்ற இடத்தை அறிதல்.*

**கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்**
**நாவாயும் ஓடா நிலத்து.**

(ப-உ) கால்வல்—(தரையில் ஓடக் கூடிய) சக்கரம் வலிய, நெடுந்தேர்—நீண்ட தேர்கள், கடல் ஓடா—கடலில் ஓடமாட்டா, கடல் ஓடும்—கடலில் ஓடுகின்ற, நாவாயும்—கப்பலும், நிலத்து ஓடா—தரையில் ஓடமாட்டா.

(க-உ) எவரும், தமக்கு ஏற்ற இடத்தை அறிந்து செய்யின் காரியம் கை கூடும்.

தேர்—எழுவாய் ; கடல் ஓடா—பயனிலே. நாவாய்-எழுவாய்; நிலத்து ஓடா—பயனிலே.

## 34. சுற்றம் தழாஅல்

*சொந்தக்காரர்களைத் தழுவிக் காத்தல்.*

**காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**
**அன்னநீ ரார்க்கே உள.**

(ப-உ) காக்கை—காக்கையானது, கரவா—தனக்குக்கிடைத்த உணவை மறைக்காமல், கரைந்து—தம் இனத்தையும் கூவி அழைத்து, உண்ணும்—சேர்ந்து சாப்பிடும். அன்ன நீரார்க்கே—அப்படிப்பட்ட தன்மையுள்ள மனிதருக்கே, ஆக்கமும்—செல்வங்களும், உள—உண்டாகும்.

(க-உ) சொந்தக்காரர்களையும் தழுவிக் காப்பாற்றினால் நன்மைகள் உண்டாகும்.

ஆக்கம்—எழுவாய் ; உள—பயனிலே

## 35. பொச்சாவாமை

காரியத்தில் சோர்வு படாமை.

**உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின்.**

(-உ) தான் உள்ளியது–தான் செய்ய நினைத்த காரியத்தை, மற்றும்—மேலும் மேலும், உள்ளப் பெறின்—முயற்சியுடன் நினைக்கப் பெற்றால், உள்ளியது—அந் நினைத்த காரியத்தை, எய்தல்—அடைதல், எளிதுமன்—மிகவும் சுலபம்.

(க-உ) சோராமல் நினைத்துச் செய்தால்தான் காரியம் கை கூடும்.

எய்தல்—எழுவாய் ; எளிது—பயனிலை.

## 36. செங்கோன்மை

நல்ல செங்கோல் ஆட்சியின் தன்மை.

**வான்நோக்கி வாழும் உலகெலாம் மன்னவன்**
**கோல் நோக்கி வாழும் குடி.**

(ப-உ) உலகு எலாம்—(பொதுவாக) உலகத்து உயிர்கள் எல்லாம், வான் நோக்கி—ஆகாயத்திலிருந்து வரும் மழையை எதிர்பார்த்தே, வாழும்—வாழுகின்றன. (ஆனாலும்), குடி—குடிமக்கள், மன்னவன்—அரசனுடைய, கோல் நோக்கி—நல்ல செங்கோல் ஆட்சியை எதிர்பார்த்தே, வாழும்—வாழ்வார்கள்.

(க-உ) நல்ல செங்கோலையே குடிகள் விரும்புவார்கள்.

குடி—எழுவாய் ; வாழும்—பயனிலை.

## 37. ஊக்கம் உடைமை

ஊக்கம் உடையவராய் இருத்தல்.

**வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனைய(து) உயர்வு.**

(ப-உ) மலர் நீட்டம்—நீர்ப் பூக்களின் நீளம், வெள்ளத்து அனைய-அவைகள் இருக்கும் தண்ணீர் ஆழத்தின் அளவாகவே இருக்கும். (அதுபோல) மாந்தர் தம்—மனிதர்களுடைய, உயர்வு —சிறப்பு, உள்ளத்து அனையது—அவருடைய ஊக்கத்தின் அள வாகவே இருக்கும்.

(க-உ) ஊக்கத்திற்கு ஏற்றபடியே உயர்வு உண்டாகும்.

உயர்வு—எழுவாய் ; உள்ளத்தனையது—பயனிலை.

## 38. மடியின்மை

சோம்பல் இல்லா திருத்தல்.

**நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
**கெடுநீரார் காமக் கலன்.**

(ப-உ) நெடுநீர்—விரைந்து செய்ய வேண்டிய காரியத்தைத் தாமதித்துச் செய்தலும், மறவி—முற்றிலும் மறந்து விடுதலும், மடி—இடைவிடாத சோம்பலும், துயில்—அடிக்கடித் தூங்குவ தும் ஆகிய, நான்கும்—இந்நான்கும், கெடுநீரார்—கெட்டொழி யும் தன்மை உடையார்க்கு உரிய, காமக்கலன்—விருப்பமான ஆபரணமாகும். (கலன்—கப்பல் என்றும் பொருள்).

(க-உ) நெடுநீர், மறவி, மடி, துயில் என்னும் நான்கும் உடையவர்கள் கெட்டொழிவார்கள்.

நான்கும்—எழுவாய் ; கலன்—பயனிலை.

## 39. ஆள் வினை உடைமை

இடைவிடாத உடல் முயற்சி உடைமை.

**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.**

(ப-உ) முயற்சி—இடைவிடாத உடல் உழைப்பு, திருவினை—செல்வத்தினை, ஆக்கும்—வளர்க்கும். முயற்று இன்மை—அந்த முயற்சி இல்லாமை, இன்மை—தரித்திரத்தை, புகுத்திவிடும்—உண்டாக்கி விடும்.

(க-உ) முயற்சி செல்வத்தைக் கொடுக்கும்.

முயற்சி—எழுவாய் ; ஆக்கும்—பயனிலை . முயற்றின்மை—எழுவாய் ; புகுத்திவிடும்—பயனிலை.

## 40. இடுக்கண் அழியாமை

துன்பம் வந்தால் மனம் கலங்காமை.

**வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்**
**உள்ளத்தின் உள்ளக் கெடும்.**

(ப-உ) வெள்ளத்து அனைய—வெள்ளம் போல் அளவில்லாது வந்த, இடும்பை—துன்பங்களும், அறிவுடையான்—அறிவுடைய ஒருவன், உள்ளத்தின்—தன் மனத்தால், உள்ள—(அத் துன்பங்களைப் போக்கும் வழியைக் கலங்காமல்) நினைக்க, கெடும்-உடனே கெட்டுவிடும்.

(க-உ) எவ்வளவு பெரிய துன்பங்களையும் மனச் சாந்தியால் நீக்கி விடலாம்.

இடும்பை—எழுவாய் ; கெடும்—பயனிலை.

## 41. அமைச்சு

*நல்ல மந்திரியின் தன்மை.*

**கருவியும் காலமும் செய்கையும் செய்யும்**
**அருவினையும் மாண்டது அமைச்சு.**

(ப-உ) செய்யும்—செய்ய வேண்டிய, அருவினையும்–அருமையான காரியம் இன்னது என்பதையும், கருவியும்—அதனைச் செய்தற்கு உதவி செய்யும் (சாதனங்கள்) கருவிகள் இன்ன என்பதையும், காலமும்—செய்தற்குரிய நேரம் இன்னது என்பதையும், செய்கையும்—அதனைச் செய்யும் விதம் இன்னதுஎன்பதையும், மாண்டது—மாட்சிமைப்பட ஆராய வல்லவனே, அமைச்சு—நல்ல மந்திரியாவான்.

(க-உ) கருவி, காலம், செய்கை, செய்யும்வினை என்னும் நான்கையும் ஆர்ராய வல்லவனே நன் மந்திரி.

மாண்டது—எழுவாய் ; அமைச்சு—பயனிலே.

## 42. வினைத்தூய்மை

*பரிசுத்தமான காரியங்களைச் செய்தல்.*

**ஈன்ருள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
**சான்ரோர் பழிக்கும் வினை.**

(ப-உ) ஈன்ருள்—(ஒருவன்) தன்னைப் பெற்ற தாயினுடைய, பசி—பசியைக், காண்பான் ஆயினும்—கண்டு வருந்துகிருன் என்ருலும், (அப்பசியைப் போக்குவதற்காகச்) சான்ரோர்—பெரியோர்கள், பழிக்கும் வினை—கூடாதெனப் பழிக்கும் தீய காரியங்களைச், செய்யற்க—செய்யாமல் இருப்பாளுக.

(க-உ) தாயின் பசியைப் போக்கக் கருதியும், பழிச்செயலைச் செய்யக்கூடாது.

ஒருவன்—தோன்ரு எழுவாய் ; செய்யற்க—பயனிலே.

## 43. நாடு

*நல்ல நாட்டின் தன்மை.*

**பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்**
**அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து.**

(ப-உ) பிணியின்மை-தட்பவெப்பத்தால் நோய் உண்டாக்காதிருத்தல், செல்வம்—செல்வம் கொடுத்தல், விளைவு—நன்ருக விளைதல், இன்பம்—களிப்பு உண்டாக்குதல், ஏமம்—காவல் உடையதாய் இருத்தல், இவ் ஐந்து—ஆகிய இந்த ஐந்துதன்மைகளும், நாட்டிற்கு—ஒரு தேசத்திற்கு, அணி என்ப—அழகு என்று அறிவுடையோர் சொல்லுவர்.

(க-உ) நோய்தராமை, செல்வம், விளைவு, இன்பம், காவல் என்னும் ஐந்தும் இருத்தல் ஒரு நாட்டிற்கு அழகு.

அறிவுடையோர்—தோன்ரு எழுவாய் ; என்ப—பயனிலை.

## 44. நட்பு

*நல்ல சினேகிதரின் தன்மை.*

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.**

(ப-உ) நட்பு—நல்ல சினேகமாவது, உடுக்கை இழந்தவன்—(ஒரு சபையின் நடுவே இருக்கும் போது) கட்டிய துணியை நழுவ விட்டவனுடைய, கைபோல—கை விரைந்து சென்று நழுவிய துணியைக் கட்டி மானத்தைக் காப்பாற்றுவது போல, ஆங்கே—நமக்குத் துன்பம் வந்த அப்பொழுதே, இடுக்கண்—அத்துன்பத்தை, களைவது ஆம்—விரைந்து நீக்கிக் காப்பாற்றக் கூடியதாகும்.

(க-உ) ஆபத்தில் உதவுவதே நட்பாகும்.

நட்பு—எழுவாய் ; களைவதாம்—பயனிலை.

## 45. நட்பு ஆராய்தல்

*சினேகத்திற்கு உரியவர் இன்னார் என்று ஆராய்தல்.*

**குணனும் குடிமையும் குற்றமும் குன்றா**
**இனனும் அறிந்தியாக்க நட்பு.**

(ப-உ) (நட்புக் கொள்ள விரும்பும் ஒருவர்) குணனும்—தாம் விரும்பும் மற்றொருவருடைய குணத்தையும், குடிமையும்-குடிப் பிறப்பையும், குற்றமும்—செய்யும் குற்றங்களையும், குன்றா இன னும்—குறையாத கூட்டுறவையும், அறிந்து—ஆராய்ந்துதெரிந்து கொண்டு, நட்பு யாக்க—(அவரோடு) நட்புக் கொள்வாராக.

(க-உ) குணம், குடிமை, குற்றம், கூடியுள்ள இனம் என் னும் நான்கையும் அறிந்துகொண்டே,பிறரோடு நட்புக் கொள்ள வேண்டும்.

ஒருவர்—தோன்றா எழுவாய் ; யாக்க—பயனிலை.

## 46. தீ நட்பு

கெட்ட சினேகிதரின் தன்மை.

**கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு**
**சொல்வேறு பட்டார் தொடர்பு.**

(ப-உ) வினை வேறு—செய்யும் செயல் வேறாகவும், சொல் வேறுபட்டார்—பேசும்பேச்சு வேறாகவும் நடப்பவருடைய, தொடர்பு—சினேகம், கனவினும்—கனவிலுங்கூட, இன்னாது— இன்பம் செய்யாது. (மன், ஓ—அர்த்தம் இல்லாத அசைச் சொற்கள்).

(க-உ) சொல்வது ஒரு விதமாயும், செய்வது ஒருவிதமாயும் உள்ளவர் சினேகம் எப்போதும் துன்பத்தைக் கொடுக்கும்.

தொடர்பு—எழுவாய் ; இன்னாது—பயனிலை.

## 47. குடிமை

உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவரின் தன்மை.

**நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்**
**குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.**

(ப-உ) நிலத்தின்—பூமியினுடைய, கிடந்தமை-தன்மையை, கால்—அப்பூமியில் முளைத்த முளை, காட்டும்—தெரிவிக்கும்.(அது போல) குலத்தில்—ஒரு குடும்பத்தில், பிறந்தார்—பிறந்தவருடைய, வாய்ச் சொல்—வாயிலிருந்து வரும் சொற்கள், காட்டும்—அக்குடும்பத்தின் தன்மையைத் தெரிவிக்கும்.

(க-உ) ஒருவரின் பேச்சைக் கொண்டு, அவர் பிறந்த குடும்பத்தின் தன்மையைத் தெரிந்து கொள்ளலாம்.

(க-உ) ஒருவரின் பேச்சைக் கொண்டு, அவர் பிறந்த குடும்பத்தின் தன்மையைத் தெரிந்து கொள்ளலாம்.

வாய்ச் சொல்—எழுவாய் ; காட்டும்—பயனிலை.

## 48. மானம்

தாழ்வைப் பொறுக்காத மானத்துடன் வாழ்தல்

**தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்**
**நிலையின் இழிந்தக் கடை .**

(ப-உ) மாந்தர்—மனிதர், நிலையின்—தமக்குரிய உயர்ந்த நிலையிலிருந்து, இழிந்தக்கடை—தாழ்ந்த சமயத்தில், தலையின் இழிந்த—தலையிலிருந்து கீழே விழுந்த, மயிர் அனையர்—மயிரைப்போல் தாழ்வாகக் கருதப்படுவார்.

(க-உ)ஒருவர் தமக்குரிய உயர்ந்த குணத்திலிருந்து தாழ்ந்தால் இழிக்கப் படுவார்.

மாந்தர்—எழுவாய் ; அனையர்—பயனிலை.

## 49. பெருமை

பெருந்தன்மை

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய் தொழில் வேற்றுமை யான்.**

(ப-உ) எல்லா உயிர்க்கும்—எல்லா மனித உயிர்களுக்கும், பிறப்பு ஒக்கும்—பிறக்கும்முறை ஒன்றாகவே இருக்கும். (ஆனால்) செய்—செய்கின்ற, தொழில் வேற்றுமையால்—தொழில்களின் வேறுபாட்டினால், சிறப்பு ஒவ்வா—பெருமைகள் ஒத்திருக்கா.

(க-உ) செய்யும் தொழிலுக்குத் தக்கபடியே பெருமை சிறுமைகள் உண்டாகும்.

பிறப்பு—எழுவாய் ; ஒக்கும்—பயனிலை. சிறப்பு—எழுவாய் ; ஒவ்வா—பயனிலை.

## 50. உழவு

பயிர்த் தொழிலின் தன்மை.

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின் செல் பவர்.**

(ப-உ) உழுது—உழுது பயிர் செய்து, உண்டு—அதனால் தாங்களும் சாப்பிட்டு, வாழ்வாரே—வாழ்பவர்களே, வாழ்வார்–சுதந்தரமாக வாழக்கூடியவர்கள். மற்று எல்லாம்—மற்றையோர்எல்லோரும், தொழுது—பிறரைப் பணிந்து, உண்டு—அதனால் தாம் சாப்பிட்டுப், பின் செல்பவர்—பிறர்பின்னே திரிபவர் ஆவார்கள்.

(க-உ) உழவுத் தொழிலே உயர்ந்த தொழில்.

வாழ்வாரே—எழுவாய் ; வாழ்வார்—பயனிலை. மற்றெல்லாம்—எழுவாய் ; பின் செல்வர்—பயனிலை.

தெளிவுரை முற்றிற்று.

## மாதிரிக் கேள்விகள்:

1. திருவள்ளுவரைப்பற்றியும், திருக்குறளைப்பற்றியும் உமக்குத் தெரிந்தவைகளை எழுதுக.

2. ஒப்புரவறிதல், ஆள்வினைஉடைமை என்றால் என்ன ?

3. அழுக்காறுமை, பொச்சாவாமை என்பவைகளைப் பற்றிச் சொல்லும் குறள்கள் யாவை ?

4. "நுனிக் கொம்பர்", "கடல் ஓடா" என்று தொடங்கும் குறள்களை எழுதி, அவற்றின் அதிகாரப் பெயர்களையும் எழுதுக.

5. "நெடுநீர்", "கருவியும்" என்று தொடங்கும் குறள்கட்குப் பதவுரை எழுதுக.

6. ஏமம், வேளாண்மை, என்பு, இடுக்கண், இன்னுது, கிடந்தமை—இவைகட்குப் பொருள் எழுதுக.

7. "மேல் பிறந்தார்", "பகல் வெல்லும்" என்ற குறள்கட்குக் கருத்து எழுதுக.

8. "மருந்தேயாயினும் விருந்தோடுண்", "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" இக்கருத் தமைந்த குறள்களை எழுதுக.

9. அகரம், துலாக் கோல், ஊருணி, காக்கை என்பவைகள் எவற்றிற்கு ஒப்பு ?

10. ஆபத்தில் உதவும் நட்புக்கும், நிலையில் தாழ்ந்த மனிதர்க்கும் காட்டப்பட்ட ஒப்பு யாவை ?

11. உயிரினும் உயர்ந்ததும், தீயினும் அஞ்ச வேண்டியதும் யாவை ?

12. மகன் தந்தைக்குச் செய்ய வேண்டிய உதவி யாது ?

13. இவ்விரண்டும், இம்மூன்றும், நான்கும், இவ் வைந்து என்னும் எண்களில் அடங்கியவை யாவை ?

14. மாசற்றார் கோளும், கனவினும் இன்னாததும் இன்னவை என விளக்குக.

15. நட்பாராய்தல் எப்படி ?

16. "அகர முதல" என்னும் குறளுக்கு எழுவாய் பயனிலை கூறுக.

வித்துவான். சுந்தர. சண்முகனாரின்

## வெளியீடுகள்:

**1. வீடும் விளக்கும். விலை ரூ. 1.**

பிறமொழியின் துணை வேண்டாத இனிய எளிய து
னித் தமிழ் நடையில், சங்கநூற் கதைகள் முதலியவற்று
பெண்ணின் பெருமையினையும், பிள்ளைகள் கடமையினைய
சிரியர் விளக்கியுள்ளார். திருமணத்தில் பரிசாக வாங்கி வழங்
ற்கு ஏற்ற வாழ்க்கை ஓவியம்! 120 பக்கம்.

**2. தனித்தமிழ்க் கிளர்ச்சி. விலை அணா 5.**

மூன்று பெண்மணிகள் கூடி ஆடிப்பாடிக் கொண்டே
மிழ்க் கிளர்ச்சி செய்கின்றார்கள்.

**3. காந்தியின் நாகரிகம். லை அணா 1.**

காந்தியடிகளின் நாகரிகத்தை விளக் து.

**4. திருக்குறள் தெளிவுரை—1. விலை அணா 4.**

உயர்நிலைப் பள்ளி முதல் பாரத்திற் குரியது.

**5. திருக்குறள் தெளிவுரை—2. விலை அணா 5.**

உயர்நிலைப் பள்ளி இரண்டாம் பாரத்திற் குரியது.

**6. ஆத்திசூடி அமிழ்தம். விலை அணா 5.**

ஆத்திசூடி வாக்கியங்கட் குரிய சிறுகதைகள், சிறுவ
கற்ற எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. பாடபுத்தகம்.

**7. குழந்தைப் பாட்டு. விலை அணா 3/**

சிறுவருக்கேற்ற 40 பாட்டுக்கள் மெட்டுடன் உள்ளன.

விற்பனையாளருக்குக் கழிவு உண்டு.

கிடைக்குமிடம்:

**பைந்தமிழ்ப் பதிப்பகம்,**

**61—பி, வைசியர் தெரு, புதுச்சேரி.**

---

புகைவண்டி நிலையப் (ரயில்வே புக்ஸ்டால்) புத்தகக்
கடைகளிலும் கிடைக்கும்.